©
தமிழ்நாடு அரசு
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 47] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 25, 2015
கார்த்திகை 9, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு–2046

# பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை நிலை எண் 99, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (H1)த் துறை, நாள் 1, செப்டம்பர் 2015.]*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம், நுகர்வோர் விவகாரங்கள் துறை, ஆணை புது தில்லி, 2–7–2015**

S.O. 1797 (E) – 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு 2002ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் (உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச்செல்வதற்கான கட்டுப்பாடுகள்) நீக்குவது தொடர்பான ஆணையில் மேற்கொண்டும் திருத்தம் செய்வதற்கு, பின்வரும் ஆணையை, இதனால், பிறப்பிக்கிறார் அதாவது:–

1. குறுந்தலைப்பும் தொடக்கமும்

(1) இந்த ஆணை 2015ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் குறித்த (உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச்செல்வதற்கான கட்டுப்பாடுகள்) நீக்கும் (திருத்தம்) ஆணை என்று அழைக்கப்படும்

(2) இந்த ஆணை 3–7–2015ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) 2002 ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் (உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச்செல்வதற்கான கட்டுப்பாடுகள்) நீக்கல் ஆணையில் கொள்முதல் செய்தல் எடுத்துச் செல்லுதல் விற்பனை செய்தல் விற்பனைக்காக விநியோகித்தல் அல்லது இருப்பு வைத்தல் ஆகியவை குறித்துசெய்யப்பட்ட சொற்றொடர்கள் மற்றும் பதிவுகள் வெங்காயத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆணை வெளியிடப்படுகின்ற நாளிலிருந்து ஓராண்டு கால அளவிற்கு நிறுத்தி வைக்கப்படும்.

(3) மாநிலத்துக்கு வெளியே உள்ள இடங்களுக்கு வெங்காயத்தை எடுத்துச்செல்லுதல், விநியோகித்தல் அல்லது விற்பனை செய்தலை இந்த ஆணையிலுள்ள எதுவும் பாதிக்காது என்பதுடன் இந்தப் பொருளை இறக்குமதி செய்வதற்கும் பொருந்தாது.

ஆயினும், மத்திய மற்றும் மாநில அரசுகள், இறக்குமதியாளர்களை வரப்பெற்ற வெங்காய இருப்பு மற்றும் அவர்கள் இருத்தி வைத்துள்ள அதனுடைய இருப்பு ஆகியவற்றை அறிவுக்குமாறு உத்தரவு பிறப்பிக்கலாம்.

[F.No. S/10/1/2015-ECR&E.]

**G. குருசரண்,**
*கூடுதல் செயலாளர்.*

குறிப்பு: முதன்மை ஆணை மத்திய அரசின் **அரசிதழின்** சிறப்பு வெளியீட்டில் பாகம் II, பிரிவு 3 உட்பிரிவு (i)ல் வெளியிடப்பட்டுள்ளது (காண்க:– G.S.R. 104 (E) 15-2-2002) இறுதியாக திருத்தப்பட்டதை 3–7–2014 ஆம் நாளிட்ட S.O.1685(E) காண்க.

(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**ஷிவ்தாஸ் மீனா,**
*அரசு முதன்மைச் செயலர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

## தொழில் துறை

## அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 208, தொழில் (எம் எம் டி 2)த் துறை, நாள் 4, செப்டம்பர் 2015.]*

தமிழ்நாடு, பெரம்பலூர் மாவட்டம், காரை–குளக்காநத்தம் பகுதி நெடுகிலும் உள்ள சீமைச் சுண்ணாம்பு புதைப்படிவங்களுடன் கூடிய காரை–பாறை அடுக்கமைவுகள் பகுதியை, தேசிய மண்ணியல் பாரம்பரிய இடமாக இந்திய மண்ணியல் ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளதாலும் (காண்க – இந்திய மண்ணியல் ஆராய்ச்சி தீர்மானம் எண் 193/150/CD/ மண்ணியல் பாரம்பரிய இடம்/தமிழ்நாடு/2015, நாள் 6–5–2015)

மத்திய அரசின் இந்திய மண்ணியல் ஆராய்ச்சி நிறுவனத் தலைமை இயக்குநர், அவருடைய கடிதத்தில் தமிழ்நாடு பெரம்பலூர் மாவட்டம் காரைக் குளக்காநத்தம் பகுதி நெடுகிலும் உள்ள சீமைச் சுண்ணாம்பு புதைப்படிவங்களுடன் கூடிய காரை–பாறை அடுக்கமைவுகள் பகுதியை, தேசிய மண்ணியல் பாரம்பரிய இடமாக பேணிப்பாதுகாப்பதற்குத் தேவையான அறிவிக்கையையும், உத்தரவையும் பிறப்பிக்குமாறு தமிழ்நாடு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளதாலும்,

சென்னை உயர்நீதிமன்றம், நீதிப்பேராணை மனு எண் 12794/2011–குறித்த 7–8–2015ஆம் நாளிட்ட அதனுடைய உத்தரவில், தமிழ்நாடு, பெரம்பலூர் மாவட்டம், காரைக்குளக்காநத்தம் பகுதி நெடுகிலும் உள்ள சீமைச் சுண்ணாம்பு புதைப்படிவங்களுடன் கூடிய காரை–பாறை அடுக்கமைவுகள் பகுதியை, தேசிய மண்ணியல் பாரம்பரிய இடமாகப் பேணிப்பாதுகாப்பதற்குத் தேவையான அறிவிக்கையையும், உத்தரவையும் பிறப்பிக்குமாறு தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டதாலும்,

எனவே, தற்போது, தமிழ்நாடு அரசு, விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறாக, தமிழ்நாடு பெரம்பலூர் மாவட்டம், காரைக் குளக்காநத்தம் பகுதி நெடுகிலும் உள்ள சீமைச் சுண்ணாம்பு புதைப்படிவங்களுடன் கூடிய காரை–பாறை அடுக்கமைவுகள் பகுதியை, தேசிய மண்ணியல் பாரம்பரிய இடமாக இதனால் அறிவிக்கிறது.

## அட்டவணை

*பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், 58. கரை (கிழக்கு) வருவாய் கிராமம்,*

| வரிசை எண் | நில அளவைப் புல எண் | பரப்பு (எக்டேரில்) | வகைப்பாடு | சுற்றெல்லை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | வடக்கு | தெற்கு | கிழக்கு | மேற்கு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | 225 | 2.62.0 | வரி புறம்போக்கு | 223 | 242 | 226/1 | 224/7 |
| 2. | 226/1 | 2.60.5 | „ | 222 | 241 | 227, 240/1 | 225 |
| 3. | 227 | 4.53.5 | „ | 228 | 240/1 | 230 | 226/1 |
| 4. | 230/2 | 3.77.5 | „ | 229 | 239 | 233 | 227, 230/1 |

| வரிசை எண் | நில அளவைப் புல எண் | பரப்பு (எக்டேரில்) | வகைப்பாடு | சுற்றெல்லை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | வடக்கு | தெற்கு | கிழக்கு | மேற்கு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 5. | 233 | 3.45.5 | வரி புறம்போக்கு | 231 | 238 | 234 | 230/2 |
| 6. | 234 | 3.62.0 | „ | எண்.76 குளக்காநத்தம் கிராமம் | 237 | 235 | 233 |
| 7. | 237 | 3.74.5 | „ | 234 | 296 | 236 | 238 |
| 8. | 238 | 4.04.5 | „ | 233 | 294 | 237 | 239 |
| 9. | 239 | 4.84.0 | „ | 230/2 | 293, 294 | 238 | 240/1 |
| 10. | 240/1 | 4.01.0 | „ | 227 | 240/2, 240/3, 292 | 239 | 226, 241 |
| 11. | 241 | 2.68.5 | „ | 225, 226/1 | 290, 292 | 240/1, 240/2 | 242 |
| 12. | 294 | 3.47.5 | „ | 238, 239 | 293, 295 | 296 | 293 |
| | **மொத்தம் — 43.41.0** | | | | | | |

**கே. ஞானதேசிகன்,**
*அரசு தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.